தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சரு	திருவள்ளுவர் யாண்டு உ௰௩உ விரோதிகிருது, மார்கழி (1971 — திசம்பர் — 1972 சனவரி)	மலர் கூ

(சென்ற இதழின் தொடர்ச்சி)

நாட்டுப் பாடல்

பேராசிரியர். வ. பெருமாள்,
எம். ஏ. பி. டி. எம். ஆர். ஏ. எசு.,
முதல்நிலைக் கல்லூரி,
உரிகம், கோலார் தங்கவயல்.

காதலுக்கு அடுத்தது திருமணம். திருமணம் ஆயிரங் காலத்துப் பயிர். திருமணம் சொர்க்கத்தில் நடத்தப்படுவது (Marriage is madein heaven). திருமணம் தெய்வீகமானது- பெரியோர்கள் முன்னிலையில் நிகழத்தப்பட வேண்டியது. திருமண நாள் இருவரும் ஒருவராக இணைக்கின்ற நன்னாள். மணமக்களுக்குப் பொன்னாள் அப்பொன்னாளை ஒட்டி எழுந்த பொன்னான பாடல்கள் தமிழில் பல உண்டு.

திருமணத்திற்கு முன்பு திருமண வீட்டில் மணப்பந்தல் போடுவது வழக்கம். திருமணப் பந்தலைச் செட்டி நாட்டில் காவணம் என்று குறிப்பிடுவார்கள். மணப்பந்தலின் அழகையும் சிறப்பையும் கற்பனை வளத்துடனும் நயத்துடனும் எடுத்து இயம்புகின்ற நாட்டுப் பாடல்கள் பல உண்டு. அவற்றுள் இதோ ஒன்று. —

முத்தைப் பிளந்தார்கள் மூன்றுங்கால் இட்டார்கள்
பவளம் பிளந்தார்கள் பந்தற்கால் நட்டார்கள்
வெள்ளியாற் கால்நிறுத்தி வெற்றிலையால் பந்திவிட்டார்
கரும்பாலே கால்நிறுத்தி அரும்பாலே பந்தலிட்டார்
ஈர்க்குப் பிளந்தார்கள் இருகாதம் பந்தலிட்டார்
மூங்கில் பிளந்தார்கள் முக்காதம் பந்தலிட்டார்
நாணல் பிளந்தார்கள் நாற்காதம் பந்தலிட்டார்,

இப்பாட்டிலுள்ள கற்பனைச் செறிவும் கவிதை நயமும் நம் செவியையும் சிந்தையையும் குளிர்விக்கின்றன. இத்தகைய மணப் பந்தல் போட்டிருக்க முடியுமா என்னும் கேள்வி ஒரு புறம் இருக்கட்டும். இப்பாடலை மனமார எண்ணி வாயாரப் பாடும் போது நம் உள்ளத்தில் எழும் மகிழ்ச்சிக்கு அளவே இராது. மீண்டும் மீண்டும் பாடிக்கொண்டேயிருக்கலாம்: அத்தகைய இனிய பாட்டு.

மணப் பந்தலையும் திருமண நிகழ்ச்சியையும் விளக்கும் மற்றொரு பாட்டையும் இங்கே காணலாம்.

வாழை மரம் பிளந்து வாசலெல்லாம் பந்தலிட்டார்
தென்னை மரம் பிளந்து தெருவெல்லாம் பந்தலிட்டார்
அம்மி வலமாக அரசாணி முன்பாக
ஆயிரம் பெருந்திரி அதற்கும் வலமாக
போயிருந்தார்கள் பெருமையுடன் வாழ்ந்திடுவோர்
மங்கல நாண்பூட்ட மகிழ்ந்தார்கள் எல்லோரும்

இப்பாடல் திருமணச் சடங்குகளைப் பற்றிய பல்வேறு உண்மைகளை மிகத் தெளிவாக உணர்த்துகின்றது.

திருமணம் முடிந்தவுடன் மணமக்கள் முன்னிலையில் பாடப் படுகின்ற பாட்டு கலியாணப் பாட்டு எனப்படும். இதனைப் பேச்சு வழக்கில் கண்ணூலப் பாட்டு என்று சொல்லுவதுண்டு. இதனை நலங்கு என்றும் குறிப்பிடுவதுண்டு. மணமகனின் உடன் பிறந்த நங்கையர் மணமகளை வேடிக்கைக்காகப் பரிகாசம் செய்தும், மணமகளின் உடன் பிறந்த மங்கையர் மணமகனைப் பரிகாசம் செய்தும் பாடுவதால் இப்பாட்டிற்குப் பரிகாசப் பாட்டு என்றும் ஏசல் என்றும் பெயர்கள் தோன்றின. ஒருவரையொருவர் ஏசிப் பாடிய பிறகு இறுதியில் இரு சாராரும் சேர்ந்து மணமக்களை வாழ்த்துவர். இதோ ஒரு பாடல். —

நடவு நட்ட காலம் போச்சு
நகையும் நட்டும் அதிகம் ஆச்சு
குடலோடொட்டிய வயிறு கோணியாச்சு
செடிசுற் றியகாலம் போச்சு
தெருவெட்டிப் பார்க்காம லாச்சு
படியுழக்குப் பேனும் போச்சு
பந்திச் செண்டு சூடலாச்சு.

மணமகனை மைத்துனிமார்கள் வேடிக்கைக்காக ஏசும் பாடல் பின்வருமாறு. —

வாங்க வாங்க அத்தானே வர்ணச் சட்டையும் போட்டு
தேங்காத் தலையும் வச்சுத் தெருவிலே அலைஞ்சவரே
காட்டிலே போய் மாடுமேய்க்கக் கஞ்சி குடித்த அத்தானே
கட்டிலிலே மெத்தை போட்டு இங்கே வந்து படுக்கணும்
கச்சேரி என்று சொன்னால் பறைச்சேரி என்று சொல்வார்
மோட்டார் கார் என்று சொன்னால் ஓட்டம் பிடித்திடுவார்
உடுப்புப் போட்டவங்களைக் கண்டால் அடுப்பை விட்டுப்
போகமாட்டார்
பஞ்சு மெத்தை என்று சொன்னால் இஞ்சி தின்ற குரங்காவார்
அத்தான் மறந்திடுங்க ஆடுமேய்க்கிற வேலை எல்லாம்
புத்தியா எங்கள் அக்காளைப் பூசை செஞ்சி பிழைச்சிடுங்க.

திருமணத்தின்போது மணமகனின் உடன்பிறந்த தங்கையர் மணமகளை வேடிக்கைக்காகக் கிண்டல் செய்வார்கள். அக்கிண்டல் மொழியில் நகைச்சுவை ததும்பும்.

எந்த ஊரடி இந்த இளகரை இந்த மோசம் செய்தேடி
என்ன மோசம் செய்தேடி ஆத்தூரு வீதியிலே
ஆடு மேய்ச்ச பெண்ணடி—நீ ஆடு மேய்ச்ச பெண்ணடி
ஆடு மேய்ச்ச பெண்ணை இன்று தேடி வந்தோமே
நாங்கள் தேடி வந்தோமே
அங்கம் பாக்கம் வீதியிலே நுங்குவித்த பெண்ணடி நீ
நுங்குவித்த பெண்ணடி
நுங்கு வித்த பெண்ணை இன்று தேடி வந்தோமே —
நாங்கள் தேடி வந்தோமே
திருவள்ளூரு வீதியிலே திருகாணி கொடுத்தாண்டி —
உனக்கு திருகாணி கொடுத்தாண்டி
திருகாணி கொடுக்கவே தேடிவந்தோமே — நாங்கள்
தேடி வந்தோமே
பாலூரு ஸ்டேஷனிலே பாலுவித்த பெண்ணடி —
நீ பாலுவித்த பெண்ணடி
பாலுவித்த பெண்ணை இன்று பாராமே வந்தோமே —
நாங்கள் பாராமே வந்தோமே.

கொங்கு நாட்டில் கோவை மாவட்டம் திருமணத்தின் போது பாடப்படுகின்ற நீண்ட வாழ்த்துப் பாடல் கம்பன் பாட்டு எனப்படும்.

இல்லறமாகிய நல்லறத்தில் அடி எடுத்து வைக்கும் பெண் களுக்கு அறவுரையும் அறிவுரையும் வழங்குவது மூத்தோர் இயல்பு. புகுந்த வீட்டில் மணமகள் எவ்வாறு வாழவேண்டும் என்று நீண்ட அறவுரையை முதியோர் வழங்குவார்கள் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய அவ்வறவுரை பாட்டாகவே அமைந்திருக்கும்.

ஆக்கவாணும் அரிக்கவாணும் அறிவிருந்தால் போதுமடி
கண்ணடிக்கிற பயலேக்கண்டால் கண்ணெடுத்தும் பாராதேடி
நெற்றியிலே பொட்டுவச்சி நெருங்கிநிண்ணு பேசாதேடி
புருவத்திலே மையைவச்சி பொய் ஒண்ணும் பேசாதேடி
வாறவனேயும் போறவனேயும் வழிமறிச்சுப் பேசாதேடி
பக்கத்து வீட்டுப் பெண்ணேப் பரிகாசம் நீ பண்ணுதேடி
கல்லுண்ணும் கணவனடி புல்லுண்ணும் புருஷனடி
காலேயில் எழுந்திரிச்சு வாசலுக்குச் சாணிபோடு
சட்டிப்பானே லொட்டு லொசுக்கு சகலத்தையும் கழுவிவை
வெள்ளி செவ்வாய்க்கிழமையிலே வீடுபூரா மெழுகணுண்டி
ஆடி அம்மாவாசையிலே ஆண்டவனேக் கும்பிடணும்
லெட்சுமி வீடு தங்கணுண்ணு எச்சியை வீட்டில் துப்பாதேடி
மச்சான் கொழுநதன் மாருக்கெல்லாம் மரியாதை
கொடுக்கணுண்டி
மாமி மாமா ரெண்டு பேரையும் மேன்மையாக நடத்துணுண்டி
தருமம் தலேகாக்குண்டி — தயவைக்கை விடாதேடி நீ
ஊரார் பிள்ளேயை ஊட்டி வளர்த்தால் — உன் பிள்ளே தானு
வளரும்
காராம் பசுவைப் போல நீ கடவுளுக்கு உகந்து நட.

நல்ல பெண்மணியின் கடமைகளே வரிசைப்படுத்திக் குறிப்பிடு வதை மேற்குறிப்பிட்ட பாடலில் நன்கு அறியலாம்.

பண ஆசையால் உந்தப்பட்ட பெற்ருேர்கள் தம்மகளே அவள் விருப்பத்திற்கு மாருக மணமகனின் வயது பொருத்தத்தைச் சிறிதும் ஆராயாமல் சிறுவனுக்கோ கிழவனுக்கோ மணம் முடிக்கும் வழக்கம் அண்மைக் காலம் வரை நம் நாட்டில் இருந்து வந்தது என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். ஒரு மங்கை சொத்துக்காகக் கட்டாயப் படுத்தப் பட்டு ஒரு சிறுவ னுக்கு மணம் செய்து வைக்கப்படுகிருள். அவள் உள்ளக் குமுறல் துயரப் பாட்டாக வெளி வருகின்றது. இதோ அவள் வேதனேக் குரல். —

இடை சிறுத்து மார்படர்ந்து
ஏழு வருடம் குமரிருந்தேன்
சீமையாடும் செல்லச்சாமி
சிறைபெடுக்க வாருமையா

பாதையிலே பச்சை வச்சேன்
பாலகனைக் காவல் வச்சேன்
பச்சைக்கு ஆசைப் பட்டுப்
பாலகனுக்கோ கை கொடுத்தேன்

ஈக்கு முத்தி இடை சிறுத்து
ஏழு வருடம் குமரிருந்தேன்
பாக்கு முத்தி பருவம் தப்பி சிறு
பாலகனுக்கோ கை கொடுத்தேன்

(பச்சை — கல்யாண வரிசை)

பருவம்எய்தி ஏழு ஆண்டுகள் ஆனமங்கை ஒருத்தி செல்லச்சாமி என்னும் இளைஞன் மேல் காதல் கொண்டதும் இறுதியில் தன் விருப்பத்திற்கும் காதலுக்கும் மாறாக ஒரு சிறுவனுக்கு வாழ்க்கைப் பட நேர்ந்த அவல நிலையையும் இப்பாடல் உணர்த்துகின்றது.

இதைப்போல மற்றொருத்தித் தான் காதலித்த இளைஞனை மணம் புரிய முடியாமல் தன் பெற்றோரின் வற்புறுத்தலுக்கு ஆட்பட்டுக் கிழவனைத் திருமணம் செய்து கொள்கிறாள். இதோ அவள் புலம்பல்

நாணலுந் தட்டை போல
நரைச்ச கிழவனுக்கோ
கோவப் பழம் போலக்
குமரி வந்த வாச்சனல்லே

செம்புல சிலை எழுதி
சிவத்தப் பிள்ளை பேரெழுதி
வம்புல தாலிகட்டி
வாழுறது எந்த விதம்?

யானை அணைஞ்ச கையி
அருச்சுனரைத் தொட்ட கையி
பூனையை அணையச் சொல்லி புள்ளி
போட்டானே எந்த லையில்.

திருமண முறையை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன ஒருவன் — ஒருத்தி முறை (monogamy). பலதார

(மனைவியர்) முறை (ஒருவனுக்குப் பல மனைவியர்) (Polygamy). பல கணவர் முறை (ஒருத்திக்கு பல கணவர்) (Polyandry) மனைவி இருக்கும்போதே கணவன் இன்னொருத்தியைத் திருமணம் புரிந்து கொள்ளும் வழக்கம் அக்காலச் சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது இவ்வழக்கம் இக்காலத்தில் குறைந்து கொண்டு வருவதைக் காணலாம். ஒருவனுக்கு மனைவி இருக்கும்போது அவன் மற்றொருத்தியை மணந்தால் அதனால் முதல் மனைவி பெரிதும் பாதிக்கப்படுவாள் என்பது சொல்லாமலே விளங்கும். அவ்வாறு பாதிக்கப்பட்ட முதல் மனைவி தன் கணவனின் இரண்டாம் மனைவியைத் தன் மனம் போனவாறு அகங்குளிரத் திட்டி ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்கின்றாள். அவள் தன் சக்களத்தியைத் திட்டுகின்ற திட்டு வசைப் பாட்டு வடிவில் வருகின்றது. இதோ அப்பாட்டு.

தங்கக் கதவசையத் தலைவாசல் வேம்பசைய
வயிரக்கல்லு மின்னுழல வந்துருக்கா சக்களத்தி
சக்களத்தி சாவாளோ சாமம்போல வேவாளோ
ஈருவலிக் குச்சிபோல இடுப்பொடிந்த சக்களத்தி
நல்ல பாம்புக் குட்டிபோல வல்லவரைக் கைபோட்டா
திண்டுக்கல்லு மூலையிலே தின்னுபோட்டேன்
கரும்புச்சக்கை
சக்கை திங்க வந்தாளோ சாரங்கெட்ட சக்களத்தி
அடிக்கணும் குளிர்காய்ச்சல் ஆறுமாசம் ஒருவருடம்
எடுக்கணும் பாடைகட்டி என்மனசு பாலாக
(சக்களத்தி-சகக்கழுத்தி; ஈருவலிக்குச்சி-துடைப்பக்குச்சி)

முதல் மனைவி தான் கருவுற்றிருக்கும் போது மற்றொருத்தியை மணந்து கொண்ட தன் கணவனைத் திட்டுகின்றாள். இதோ அவள் வசைப் பாட்டு —

பாவநாசம் பாக்கவென்று பாவனையா அழைச்சுப் போயி
பத்து மாசம் சுமசுமக்கப் பரிசுதந்த நேசம்மையா
என்னை விட்டுவிட்டு இளைய தாரம் கட்டினயே
போற வழியே உன்னைப் பூநாகம் தீண்டாதோ ?

ஒரு தலைவன் தன் மனைவியைப் புறக்கணித்து விட்டு ஆசைக் கிழத்தியிடம் இரவு நேரததில் போய்க் கொண்டிருந்தான் அவன் தகாத செயலைக் கண்ட அவன் மனைவி உணர்ச்சி வசப்பட்டுத் தன் பெருமையையும் ஆசைக் கிழத்தியின் சிறுமை

யையும் சொல்லி வசைப் பாட்டாகப் பாடுகின்றாள். ஆசைக் கிழத்தியை இல்லக்கிழத்தித் தன் மனம் போனவாறு திட்டுகிற போக்கை இப்பாட்டில் காணலாம்.

வருவாக போவாக வாசலிலே நிப்பாக
வேசை மகளாலே வெறுத்தில்ல போராக
இலந்தைப் பழம்போல இங்கிதமாய் நானிருக்க
சாணி உருண்டைக்காகச் சாமவழி போகலாமா

எரிந்த கட்சி எரியாத கட்சி முதலிய அம்சங்களைக் கொண்ட மன்மதனைப் பற்றிய பாட்டு காமன் பாட்டு எனப்படும். குறத்தி குறி சொல்லிக்கொண்டே பாடுகின்ற பாட்டு குறத்திப் பாட்டு எனப்படும். குறவர் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டும் நாடகப் பாட்டு குறவஞ்சி எனப் பெயர் பெறும். இரவு நேரத்தில் பொழுது போக்கிற்காக உடுக்கையை அடித்துக்கொண்டு பாடுகின்ற பாட்டு உடுக்கைப் பாட்டு எனப்படும். வேட்டையாடச் செல்வோர் பாடிக் கொண்டே செல்வதுண்டு. அது வேட்டைப் பாட்டு எனப்படும்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. சுவையை இனிப்பு, புளிப்பு, கைப்பு (கசப்பு). கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என ஆறு பிரிவுகளாகப் பிரித்து அவற்றிற்கு அறுசுவை எனப் பெயர் சூட்டிய பெருமை பண்டைத் தமிழர்க்கு உண்டு. சமையற்கலையையும் அறுசுவையையும் கவிச்சுவையுடன் சொல்லக் கூடிய நாட்டுப் பாடல்கள் பல தமிழில் உண்டு. இதோ ஒரு பாட்டைச் சுவைத்துப் பாருங்கள்.

பாண்டத்தைக் கழுவிப் பனிநீர் உலைவார்த்து
முத்துப்போற் சோறு வடித்தாள் இளங்கொடியாள்
அத்தி விறகொடித்துத் தித்திக்கப் பால்காய்ச்சிப்
புத்துருக்கு நல்லநெய்யும் பொன்போற் பருப்புகளும்
அதிரசமும் தேன்குழலும் அறுசுவைப் பண்டங்களும்
பத்துவிதக் கறியும் பதினெட்டுப் பச்சடியும்
எட்டுவிதக் கறியும் இயலான பலகுழம்பும்
முப்பழமுஞ் சர்க்கரையும் அப்பளமும் தான்படைத்து
ஆயாயசம் தீரவே பாயசந்தான் கொடுத்தாள்.

இப்பாட்டைப் பாடும்போதே அறுசுவை உணவு உண்ட மகிழ்ச்சி ஏற்படுகின்றதல்லவா ?

(தொடரும்)

பேச்சுத் தமிழில் வினையெச்சம்

டாக்டர், கி. கருணாகரன், எம். ஏ, பிஎச். டி
மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தமிழ் 'வினை' யில் (Verb) வினையெச்சம் (Verbal Participle) என்ற ஒரு இலக்கணப் பிரிவு (Grammatical Category) உள்ளது. தமிழில் வினையெச்சத்தை எப்பொழுதும் ஒரு முற்று வினையோ (Finite Verb) அல்லது அதன் மாற்றப்பட்ட பகுதியோ (Its transformed form) அடுத்து நிற்கும். ஆகவே வினையெச்சமும் வினைச்சொலலும் தமிழில் அடுத்து நிற்பவைகளாகும் (Immediate Constituents)

எ. காட்டு :	அவன்	ஓடி	வந்தான்
		வி. எ.	மு. வி

வினையெச்சம் அது தழுவி நிற்கும் வினைக்கு முன்பாகவே எப்பொழுதும் வரும். இங்கு மேலே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் ஓடி என்ற வினையெச்சம் அவன் என்ற எழுவாய் (Subject) செய்யும் வேலையை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

தமிழில் [1] வினையெச்சம் அதை அடுத்து நிற்கும் வினைச் சொல்லுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வகையான இலக்கணத் தொடர்புகளைக் [2] (Grammatical Relationships) கொண்டிருக்கிறது எனலாம். இந்த வகையான இலக்கணத் தொடர்புகளால் ஏற்படும் பொருள் மாற்றங்களை விளக்க சில வேற்றுமைச் சொல்லியன்களையோ (Case morphemes) அல்லது இடைச் சொற்களையோ (Particles) அடிப்படை வாக்கியத்தில் இணைக்க வேண்டும்.

சொல்லியல் அமைப்பில் (Morphological Structure) மிகவும் எளிதாகக் காணப்படும் வினையெச்சம் சொற்றொடரில் அமைப்பில் (Syntactic Structure) மிகவும் சிக்கல் நிறைந்ததாகத் தமிழில் காணப்படுகிறது. [3]

---

1. Dr. K. Karunakaran — 'A Descriptive Grammar of the Dialect of the Kollimalai Tribes' [Ph. D. thesis submitted to Annamalai university, 1969].
2. Dr. S. Agesthialingom — **A Generative Grammar of Tamil,** [DLP, 11], Annamalainagar, 1967.
   Dr. K. Karunakaran — **The Kollimalai Tamil Dialect,** [DLP. 26], Annamalainagar, 1971
3. Dr. S. Agesthialingom — 'Tirukkuralil ceyven Eccam', Aayvukkovai, Annamalai University, 1971.

இலக்கணத் தொடர்புகள் :

பொருள்	அடிப்படை வாக்கியத்தில் இணைக்கப்பட்டுள்ள பகுதி
1. செயப்படுபொருள் (object)	பெயர் + ஐ
2. தொடர்ச்சி (consecutive)	பிறகு
3. இயல்பு (Manner)	அப்படி
4. ஒரே நேரம் (Simultaneous)	அப்பொழுது + அப்படியே
5. மூன்றும் வேற்றுமை	அதனல்

1. செயப்படுபொருள் (object)

அவன் வீட்டு வேலையைச் செய்து முடித்தான்
அவன் வீட்டு வேலையைச் செய்தான் }
அவன் வீட்டு வேலையை முடித்தான்

2. தொடர்ச்சி (consecutive)

நான் சோறு சாப்பிட்டு மேலே போவேன்
நான் மேலே போவேன்
நான் சோறு சாப்பிடுவேன்

3. இயல்பு (Manner)

நீ நிற்காமல் போ
நீ போ }
நீ நிற்காதே

4. ஒரே நேரம் (Simultaneous)

கண்ணன் நன்ருக குறட்டைவிட்டுத் தூங்குகிருன்
கண்ணன் தூங்குகிருன் }
கண்ணன் நன்ருக குறட்டைவிடுகிருன்

5. மூன்றும் வேற்றுமை (Instrumental)

அவன் பைத்தியம் பிடித்து அலேகிருன்
அவன் அலேகிருன் }
பைத்தியம் அவனுக்குப் பிடித்தது

மேலே சொல்லப்பட்டுள்ள ஐந்து வகையான இலக்கணத் தொடர்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் அனைத்தும், அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வாக்கியங்களை இணைத்தே பெறப்படுகின்றன. [4]

---

4. Dr. S. Agesthialingom — **A Generative Grammar of Tamil**, [DLP, 11], Annamalainagar, 1967.
N. Chomsky — **Aspects of the Theory of Syntax**, M. I. T. Press, Cambridge, 1965.

1. செயப்படுபொருள் (object)



→ அவன் வீட்டு வேலையைச் செய்து முடித்தான்

சுருக்கெழுத்துக்களின் விளக்கம்:

பெ — பெயர் ;

பெ. தொ — பெயர்த்தொடர் ;

2. தொடர்ச்சி (consecutive)



→ நான் சோறு சாப்பிட்டு மேலே போவேன்.

மு. வி — முற்றுவினை

நா. வே — நான்காம் வேற்றுமை;

வே — வேற்றுமை ;

3. இயல்பு (Manner)



→ நீ நிற்காமல் போ

இ. வே — இரண்டாம் வேற்றுமை

வி — வினை

வி. அ. — வினை அடை

4. ஓரே நேரம் (Simultaneous)



→ கண்ணன் நன்ருக குறட்டை விட்டுத் தூங்குகிருன்.

வி. எ — வினைஎச்சம் ;

வி. தொ — வினைத்தொடர் ;

வா — வாக்கியம்.

5. மூன்றும் வேற்றுமை (Instrumental)



→ அவன் பைத்தியம் பிடித்து அலேகிருன்.

கம்பரின் நகைச்சுவை

திரு K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

'இடருடை உள்ளத்தோரை எண்ணினும் உணர்ந்திலா தாளுகிய' அங்கதன், இடருற்ற இராமருக்காக இராவணன் பால் தூது சென்ற ஞான்று, இராவணன்' நீயாரென்றுவினவ, அங்கதன்

'இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்களோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக்கிரிகள் தாவித்திரிந்தனன் தேவர் உண்ண
மந்தரக் கிரியால் வேலை கலக்கினுன் மைந்தன் என்ருன்'

என்றதில் 'பண்டோர் இராவணன் என்பான்' எனச் சொல் லும் அங்கதன் வாக்கில் நகைச்சுவை தேங்கியும், இராவணனை 'சுந்தரத் தோள்களோடும் வாலிடை ந் தூங்கச் சுற்றிச் சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன்' என்பதில் உவகைச் சுவை பதுங்கி யும் இருத்தலை நயங் கண்டு நகுதற்பாலது. இதனைக் கேட்ட இராவணன்,

'சீதையைப் பெற்றேன் உன்னைச் சிறுவனுமாகப் பெற்றேன்
ஏதெனக்கரியது'

என விடை பகரும் வகையிலும், நுண்ணியதாய நகைக்குறிப்பும் உளதாகின்றது காண்க.

அஞ்சனைச் சிறுவனுகிய அனுமானைக் கண்ட இலங்கை வேந்தன், கனற்பொறி கண்களில் பறக்க 'நீ யார்'? என வினவ. அனுமான் 'வாலி சேய் விடுத்த தூதன்' என விடை யளித்த அளவில். இராவணன் 'வன்றிலலாய வாலி வலியன், கொல்? அவனது ஆசில் வாழ்க்கை நன்று கொல்? என மீண் டும் கேட்க' அனுமான் நகைத்து 'அஞ்சற்க. அவ்வுறவு கழிந் தது. இராமரது வடிக்கணை யொன்ருல், துஞ்சினுன் வாலி, அவன் வாலும் மாய்ந்தது? இனிவராது காண்' என்றகருத்துபட

'அஞ்சலை அரக்க பார்விட்டந்தரம் அடைந்தானன்றே
வெஞ்சினவாலி மீளான், வாலும் போய் விளிந்ததன்றே'

எனப் பகர்ந்தான். இதன்கண் 'அஞ்சலை.....வாலும் போய் விளிந்ததன்றே' என்பதிலுள்ள நகை வெடி உவகையின் அதிர்ச்சி முடியாய் விளங்குவது உள்ளுதொறும் பெரியதோர் வியப்பு பயப்பனவாய்த் திகழ்தல் ஒரு தலை. கம்பர் நகைச் சுவைக்கே மகிழ்ச்சியூட்டி உரையாடலில் விளையாடச் செய்யும் வகை அளவற்ற நயம் மிகத் தருவதாகும்.

சூர்ந்து சிந்திக்கின், ஆற்றல், நிறை, கல்வியமைதி, அறிவு முதலியவற்றால் இழைந்து கிடக்கும் நகைச் சுவையினை, காவியத்தில் இறும்பூது கொள்ளும் வகையில், பயனுறும் சிறப்பியல் பொடு பரப்பிய பெருமை இராம தூதராகிய அனுமான் ஒருவருக்கே உரியதாகும். பகைவரும் விரும்புமாறு மொழியும் சொல் வன்மையால் உவகையெழ இடத்திற்கும் தன்மைக்கும் ஏற்ப மாறிவரும் அவரது நகைச் சுவைப் போக்கினை அவரது சொற்களைக் கொண்டே கம்பர் தெளிவுறுத்துதலான், கம்பர் கருத்துக்களை வெளியிடுபவர் அனுமானென்பது அறியப்படும். அனுமானது கலையறிவின் திறத்தில் கனிந்து விளைந்தது நகைச்சுவை யின்பம். எக்காரியத்தைப் பற்றிக் கூறினும் அனுமான் அதனைப் பக்குவமாக உயர்வோடும் உல்லாச உணர்வோடும் நகைபட விதந்து கூறுவர். அதனில், உவகைக்சுவை அடக்க ஒடுக்கமாகப் பொருந்தி, கிளு கிளுத்தலைச் செய்யும்படி அமரகத்தில், மாற்றாரின் மாயங்களையும் வஞ்சனையின் சிறுமைகளையும், அஞ்சாத நெஞ்சமும் எஞ்சாத வன்மையுங்கொண்டு அம்பலப்படுத்துவார். எதிரிகளின் வீரங்களைத் தலைகுனியச் செய்து அவர்களையும் மானபங்கமும் செய்து விடுவார்.

இந்திரசித்தின் மாயப்போர்களால் தீராத் தொல்லைகளை அனுபவித்த அனுமான், அவற்றின் மாயப் பொய்யின் போக்கினை, உலகம் புகழும் தூய்மையனை வீபீடணன் பாலுணர்ந்து, வேள்விச் சாலையில் மறைவாக நின்ற இந்திரசித்தை பரிவாகப் போருக்கழைத்து, அவனது மாயப் பொய்களை அவனிடமே, நாணும் வண்ணம், விரிவாக அவன் மானத்தை வாங்கிவிடும் வகையில் எளிய சொல்லானும், அருமைப் பொருளானும் நகைச் சுவை பயக்கக் கிண்டலாக, மின் வெட்டுகள் போன்றுரைத்தது அனுமானது நகையாடும் புலமைத் திறத்தையும் நகையரும்பும் துணிந்த சொல்லாற்றலையும் தெற்றெனத் தெளியப்படுத்தும். கற்பனை கடந்த வீர அனுமானது நகைக் கிண்டலும் குத்தலும் இராமபாணத்திலும் கூரியவை யென்பது உணரப்படும். மற்றும் அனுமானது பேச்சில் அலை

அலையாக நகைச்சுவை கிளம்பி பெருமித நடையோடும் ஓசை அமைதியோடும் திகழ்ந்து வருதலை இவண் காண்க. 'நான் நினக்கு இரந்து கூறுவதைக் கேளாய்! சீதையை வெட்டி வீழ்த் துவதாகக் கூறினையே! அது முடிந்து விட்டதா! அயோத்தியை நோக்கிச் சென்று இராமரது தாயையும் தம்பிமார்களையும் வதைப்பதாகப் புகன்ருயே! அந்தக் காரியமும் முடிவடைந்து விட்டதா!

நானுனை இரந்து கூறும் நயமொழி ஒன்றுங் கேளாய்
சானகி தன்னை வாளால் தடிந்ததோ தனதன்றந்த
மானமேற் சேனையோடும் வடதிசை நோக்கி மீது
போனதோ கோடி கோடி வஞ்சமும் பொய்யும் வல்லாய்!

நீ சென்ற இடத்தில் சக்கர வியூகம் கட்டி பரதன் நின்னை எதிர் கொண்டு தடுத்திருப்பானே! ஆங்கு நிகழ்ந்தது யாது? பர தனை வென்று திரும்பியது எப்பொழுது? வேள்விக்கு முன் னேற்பாடு செய்தது எப்போது?

'தடந்திரைப் பரவை என்ன சக்கர யூகம் புக்குக்
கிடந்தது கண்டதுண்டோ நாணெலி கேட்டிலாயோ
தொடர்ந்துபோய் அயோத்தி தன்னைக்கிளையொடுந் துணியநூறி
நடந்ததெப்பொழுது வேள்வி முடிந்ததே கரும நன்றே'

ஆகா! பரதனிடம் நீ சென்று உன வில்வலங்காட்டி மீண்டாய் ஆ! அது என்ன அற்புதப் புதுமை!

'ஏந்தகன் ஞாலமெல்லாம் இனிதுறைந்தியற்கை தாங்கும்
பாந்தளிற் பெரிய திண்டோள் பரதனைப் பழிபிற்றீர்ந்த
வேந்தனைக் கண்டு நீ நின் வில்வலங் காட்டி மீண்டு
போந்ததோ வுயிருங் கொண்டே யாயினும் புதுமையன்றே'

ஆங்கு சத்துருக்கனைச் சந்தித்து நின்தனுவலங் காட்டினை போலும்

அம்பரத்தமைந்த வல்வில் சம்பான் ஆவி வாங்கி
உம்பருக் குதவி செய்த வொருவனுக்கு உதயஞ்செய்த
நம்பியை முதல்வரான மூவர்க்கு நால்வரான
தம்பியைக் கண்டு நின்றன் தனுவலங் காட்டிற்றுண்டோ

உன்னுடைய மாயப் போராற்றல் இன்றே மடிந்தது காண்' இனி நீ வேள்வித் தீயினை வளர்க்க இயலாது. வேள்வித்.

தீயின் இனிய கீதமாக இலக்குவனது வில்லோசை உன்னை வருந்தி அமருக்கு அழைக்கிறது. உன் தவவலிமையாலும். வஞ்சனை திறத்தாலும் இனி கூற்றுவன் வரவையும் தவிர்க்க முடியாது. அரி, அயன், மாலும் உதவி புரியினும் நீ சாதல் சரதம்' என அழுத்தந்திருத்தமாக இயம்பினுர் ஆலமுண்ட கண்ணுதலைப் போன்று ஆற்றல்கொண்டு அஞ்சாது நகும் இயல்புடைய அனுமான்.

தீ யொத்த வயிரவாளி
உடலுறச் சிவந்த சோரி
காயொத்த செவியினூடுங்
வ.யினுங் கண்களூடும்
பாயப் போயிலங்கை புக்கு
வஞ்சனை பரப்பச் செய்யும்
மாயப் போராற்ற லெல்லாம்
இன்றோடு மடியும் மன்றே (1)

பாசமோ மலரின் மேலான்
பெரும் படைக்கலமோ பண்டை
ஈசனுர் படையோ மாயோன்
நேமியோ யாதோ விண்ணும்
வீசநீர் விரும்புகின்றீர்
அதற்கு நாம்வெருவிச் சாலக்
கூசினேம் போதும் போதுங்
கூற்றினுர் குறுக வந்தார் (2)

வரங் கணீர் உடையவாறும்
மாயங்கள் வல்லவாறும்
பரங்கொள்வான் வரி விற்றெய்வப்
படைக்கலம் படைத்தவாறும்
உரங்களும் நின்றதன்றே
யும்மை நாமுயிரினேடும்
சிரங்களைத் துணித்து மென்னக்
கண்டது திறம்பினுமோ. (3)

விடந்துடிக் கின்ற கண்டத்
தண்ணலும் விரிஞ்சன்தானும்
படந் துடிக்கின்ற நாகப்
பாற்கடற் பள்ளியானும்
சடந்துடிக் கிலராய் வந்து
தாங்கினுஞ் சாதறிண்ணம்
இடந் துடிக்கின்ற துண்டே
இருத்திரோவியம் புவீரே (4)

என அனுமான் ஏற்ற செவ்வியில் குத்தலாகவும் கிண்டலாக வும் தோன்றுமாறு, கவிதையே பெருமூச் செறியக் கூறியது, உவகைதரும் நகைச்சுவை வளனுக்கு நிலைகளனாகும்.

கம்பர் நகைச்சுவைக்கு அரசு; இணையற்ற நகைச் சுவை யினை யளிக்கும் சிறந்த உவகையாளர். உளங்களியுறுத்த, விருத்தப்பாவினத்து மலரில் நகைச் சுவைத் தேனை பொலியும் படி கம்பர் செய்து விடுவதினாலே, இவரது நகைச்சுவையுடைய கருத்துரைகள் கலை நடையுடன் போற்றப்படும் உபநிடத மாகவே அமைந்து விடுவது அறியப்படும். இராம காவிய நாடகத்தில், கம்பரது சொல்லிலடங்காத திறத்ததாய் நகைச் சுவைக் காட்சி இயற்கை யுண்மையைக்கொண்டு மனித இயல்பினை நன்கு விளங்கச் செய்யும் விழுமமுடையது. இவரது உவகை யெல்லாம் அல்லல் நீத்தனவாக இருக்கும் அருமையியல்பினை யுடையன. நாடக மேடையில் வெளிப்பட விளங்கும் நகைச் சுவை போன்றில்லாது, கம்பரது நகைச்சுவை அறிவுச் சுட ரோடு ஆங்காங்கே கரந்து நின்று, கலை திகழுமாறு கண் களுக்கும் செவிகளுக்கும் அமுதளிக்கும் பான்மையது

நகைச் சுவைக்கு அளவுகோல் கம்பரே யாவரெனும்படி, காப்பிய நலனும் அழகுங்கருதி காப்பிய மாந்தர்களது மன நிலையையும் மன எழுச்சியையும் முன்னேற்றிக் காட்டவும், கதை வளர்ச்சியையும், கதை நுவலும் பொருளின் தத்துவப் போக் கினையும் உணர வைக்கவும், கம்பர் நகைச் சுவையினை இன்புறக் கையாண்டுள்ளார். மேலும் நகைச் சுவைவழி, கம்பர் தம் கவிதையில் ஓவிய எழிலை உண்டு பண்ணி, உலக நடையொழுக் கங்களையும், வாழ்வியலின் விழுப்ப வகையினைச் சுட்டும் பேத நடை நல்லியல்புகளையும் காவியத்தோடு இழையச் செய்து விளங்க வைத்தது மகிழத்தக்க தகுதியுடைத்து. கல்வியிற் பெரி யாராய கம்பர், தமிழ்க் காவிய மாளிகையினை அமைத்து, ஆங்கே இலக்கியப் புகழுடைய நகைச் சுவைக் கலை விளக்கை, தம் மொழியறிவாலும் பொருளறிவாலும் உள்ளுணர்ச்சி நிறை வாலும் ஏற்றி வைத்து தமது உள்ளத்தில் நகையின் ஓவ் வொரு அணுவும் இயல்பாகக் கலைநடம் புரியும் வகையினையும் தெளிந்து காண வைத்துள்ளார்.

தெய்வச்சிலையார் உரைச் சிறப்பு

டாக்டர் மோ. இசரயேல்
தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.

தொல்காப்பியச் சொல்லதிகார உரைகள்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு இன்று ஆறு உரை நூற்கள் கிடைக்கப் பெறுகின்றன. அவை முறையே இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார், பெயர் தெரியாத ஒருவர் ஆகியோரால் எழுதப் பட்டவையாகும். பெயர் தெரியாத உரையாசிரியர் ஒருவரால் எழுதப்பட்ட உரை முழு அளவில் கிடைக்கப்பெற்றிலது; வேற்றுமை மயங்கியலில் சில சூத்திரங்கள் வரையே உள்ளது. ஏனைய ஐந்து உரையாசிரியர்களால் எழுதப்பட்ட உரை நூற்கள் முழுமையாக பெரும் அச்சிடப்பட்டு மிகுதியாக இன்று நமக்குக் கிடைக்கின்றன.

சேனாவரையர் உரை

எனினும் சொல்லதிகாரம் என்றதும் தமிழறிஞர் பலருக்கும் சேனாவரையர் உரையே நினைவுக்கு வருகின்றது. ஏனெனில் அவர்களே பல்லாண்டுகளாகப் புலவர், முதுகலை ஆகிய பட்டப்படிப்பிற்குரிய பாடத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது; பல ஆண்டுகளுக்கு முன்னரே அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. மேலும் நுணுகி ஆராய்ச்சி முறையில் கருத்துக்களை விளக்கிச் செல்லுதலும் சீரிய மொழி நடையில் செய்திகளைச் செப்பமுறச் சொல்லுதலும் சேனாவரையர்க்கு இயல்பாயமைந்த திறனகளாக இருத்தலின் நடையில் கடுமையும் கருத்தில் அருமையும் காண விழைந்த தமிழறிஞர் அதில் பெரிதும் ஈடுபடலாயினர். எனவே சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை சேனாவரையர் உரை மட்டுமே மிகுதியும் படித்துப் போற்றப் படுவதாயிற்று.

பிற உரைநூற்களில் ஆர்வம்

ஆனால் சற்றேறத்தாழ இருபதாண்டுகளாகப் பிற உரை நூற்களையும் படித்து அவற்றை ஒப்பிட்டறியும் ஆர்வம் தமிழறிஞர்கடையே மிகுந்தது. இன்று உரையாசிரியர்களின் கருத்துக்களை ஒப்பிட்டுச் சீர்தூக்கி உண்மைகாண விழைகின்றனர்

அறிஞர் பலர். எனவே பிற எல்லா உரை நூற்களும் ஒன்றன் பின் ஒன்ருக அச்சிடப்பட்டு வெளிவந்து விட்டன. சொல் லதிகாரத்திற்குக் கிடைக்கப்பெறும் இவ்வுரைகளில் தெய்வச் சிலையார் உரையின் சிறப்பினை ஒரு சிறிது எடுத்துக் காட்டி, ஆய்வாளர்க்கு அது மிகுதியும் பயன்படும் வகையினைத் தெளிவு படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்

தெய்வச்சிலையார் உரைநூல் வரலாறு

தெய்வச்சிலையாரின் தொல்காப்பியச் சொல்லதிகார உரை முதன் முதல் 1929-ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதிப்பாக வெளிவந்தது. அன்று அதனைச் சங்கத்தின் பொறுப் பில் கரந்தைக் கவியரசு உயர்திரு வேங்கடாசலம் பிள்ளை அவர் கள் பதிப்பித்தார்கள். முதலில் அவர்களுக்குக் கிடைத்த ஓர் ஏட்டின் அடிப்படையில் முழுவதையும் பதிப்பித்த பின்னர் இன் னும் ஓர் ஏடு கிடைத்தது. அந்த ஏட்டில் சில வேறுபாடுகள் காணப்பட்டன. அவர்கள் அவற்றை யெல்லாம் பிற்சேர்க்கை யாகப் சேர்த்துப் பதிப்பித்துள்ளார்கள். இப்பதிப்பு இன்னும் குறைந்த விலையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் கிடைக்கப் பெறுகின்றது.

பின்னர் 1963-இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தார் அறிஞர் உயர்திரு கு. சுந்தரமூர்த்தி அவர்கள் எழுதிய விளக்கத்துடன் தெய்வச்சிலையார் உரையைப் பதிப்பித்து வெளி யிட்டுள்ளார்கள். கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதிப்பில் பிற்சேர்க் கையாகச் சேர்க்கப்பட்ட பகுதியின் துணையால் இப்பதிப்பில் பல்வேறு இடங்களில் திருத்தங்கள் சில செய்யப்பட்டுள்ளன. நூற்பா நுவலும் பொருள் தலைப்பில் காட்டப்பட்டுள்ளது. பாடவேறுபாடுகள், இன்றியமையா மேற்கோள் பகுதிகள், உரையில் காணும் இலக்கியப் பகுதியின் இடங்கள் ஆகியவை அடிக்குறிப்புக்களாகத் தரப்பட்டுள்ளன. தெய்வச்சிலையார் உரையினைப் பிறர் உரைகளோடு ஒப்பிட்டறியப் பயன்படும் வகையில் விளக்கவுரை ஒன்று எழுதிப் பிற்பகுதியில் சேர்க்கப் பட்டுள்ளது.

உரைப் போக்கு

தெய்வச் சிலையார் உரை எளிமையும் தெளிவும் உடையதாக அமைகின்றமையால் யாவரும் எளிதில் படித்து விளங்கிக் கொள்ளுதல் இயலும். எளிமையிலும், சொற்செறிவு பொருட்

செறிவு ஆகியவை மிகச் சிறந்த முறையில் அமைகின்றன. செய்தியினைச் சுருங்கச் சொல்லி விளக்குந் திறன் பாராட்டற் குரியதாய் அமைகின்றது உரைநடை உயிரோட்டம் உள்ள தாய்க் காணப்படுகின்றது. இவண் ஓர் எடுத்துக்காட்டினைக் காண்போம்.

"இனி, வழுவாமாறு:—உயர்திணை மூன்று பாலும் அஃறிணை யிரண்டு பாலொடு மயங்குதல் திணைவழுவாம். அவை தம்முள் தாம் மயங்குதல் பால் வழுவாம். தன்மை முன்னிலை, படர்க்கை யென்னும் மூன்றிடமும் ஒன்றோடொன்று மயங்குதல் இடவழு வாம். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலமும் தம்முள் மயங்குதல் காலவழுவாம் எல்லாப் பொருளை யும் பயின்ற மரபிறைற் கூருதது வரபு வழுவாம்". [1] இவ்வாறே உரை நடை ஓட்டமுடையதாயும் எளிமையும் தெளிவும் உடைய தாயும் அமைகின்றது.

எடுத்துக் காட்டுக்கள் மிக எளிமையானவைகளாகவும் எளி தில் தெளிவுபெறப் பயன்படுவனவாகவும் அமைகின்றன. எ—டு. அவன் உண்டது: திணை வழூஉ அவன் உண்டனள்: பால் வழூஉ. நீ உண்டனள் ; இட வழூஉ. நாளை உண் டேன்: கால வழூஉ. அவன் மேய்ந்தான்: மரபு வழூஉ [2].

தேவைப்பட்ட இடங்களிலெல்லாம் இலக்கியங்களினின்று சிறந்த எடுத்துக்காட்டுக்கள் தரப்பட்டுள்ளன. கருத்துக்களை இலக்கியச் சான்றுகளால் நிறுவுகின்றமை ஆசிரியரது ஆழமான இலக்கியப் புலமையை எடுத்துக் காட்டுகின்றது மன்றிப் படிப் போர்க்கு மிகு பயன் நல்குவதாகவும் அமைகின்றது.

எ—டு.

நூற்பா **143**. ளகர ஈற்று முறைப்பெயர் விளி ஏற்குமாறு

'அகவன் மகளே அகவன் மகளே' எனவரும் [3] என்கின்ருர்.

நூற்பா **418** ஒரு சொல்லடுக்கு

'குறங்கென, மால்வரை யொழுகிய வாழை
வாழைப் பூவெனப் பொலிந்த வோதி [4] என்ற

வழி, வாழை என்னும் சொல் இரண்டனுள் ஒன்று அசை நிலை யாயிற்று' என்கின்ருர்.

வடமொழிப் புலமை நன்கு பெற்றிருந்த தெய்வச்சிலையார் தம் உரை நூலில் ஆங்காங்கே தமிழ் இலக்கணத்தை வடமொழி

இலக்கணத்தோடு தொடர்பு படுத்திக் காட்டியிருப்பது கண்டு மகிழத்தக்கது.

எ—டு. நூற்பா 293-இல் வடநூலார் தாது என்பது உரிச்சொற்களைக் குறிக்கும் என்கின்றார்.

அவர் 88, 411 ஆகிய நூற்பாக்களின் உரையில் பாணினியை ஒப்பிட்டுள்ளார். மேலும் பல இடங்களில் தமிழ்ச் சொற்களுக்கு இணையான வட சொற்களைக் கூறிச் செல்லுகின்றார்.

தெய்வச்சிலையார் தம் உரையில் தமது கொள்கையை வற்புறுத்திக் கூறுவதில் கருத்துச் செலுத்துகின்றாரே யன்றிப் பிற உரையாசிரியர் கருத்தை மறுப்பதில் பெரிதும் ஈடுபடவில்லை. அவர் பிறர் கொள்கையை எடுத்துக்காட்டி வன்மையாக மறுக்க விரும்பவில்லை யென்றே கூறலாம். ஒரு கால் மறுக்க நேரினும் பெயரைக் குறிப்பிட்டுக் கூறி மறுப்பதில்லை, இவர் பிறரை மறுக்கும் இடங்கள் ஒரு சில உள. அவற்றை 1 32, 63, 68, 101, 405, 443 ஆகிய நூற்பாக்களின் உரைகளில் காணலாம். முன்னவை இரண்டிலும் உள்ளவை இளம்பூரணரை மறுப்பனவாகத் தோன்றும்; 88, 101, 443 ஆகிய நூற்பாக்களின் கீழ் உள்ளவற்றை ஏனைய உரையாசிரியர்களை மறுப்பவை எனலாம். 63-இல் உள்ளது கிடைக்கப்பெறும் தொல்காப்பியச் சொல்லதிகார உரை ஒன்றிற்கும் பொருந்தவில்லை. 405-இன் உரையில் தொல்காப்பிய உரையாசிரியர் கருத்து மறுக்கப்படவில்லை.

மேலும் தெய்வச்சிலையார் ஒவ்வோர் இயலின் இறுதியிலும் கிரந்த வகையான் உரையினது அளவைக் குறிப்பிட்டுச் செல்லுகின்றார். எடுத்துக் காட்டாக, கிளவியாக்கத்தின் இறுதியில் 'இவ்வோத்தினுள் சூத்திரம் உட்பட உரையினது அளவு கிரந்த வகையான் ஐந்நூற்று நாற்பது' [5] எனவும், வேற்றுமையியலின் இறுதியில் இவ்வோத்தினுள் சூத்திரம் உள்பட உரையினது அளவு கிரந்த வகையான் முந்நூற்று முப்பது' [6] எனவும் கூறியுள்ளார்.

நூற்பாக்களின் முறை அமைப்பு

சில இடங்களில் பிற உரையாசிரியர்கள் இரண்டாகக் கொள்ளும் நூற்பாக்களை ஒன்றாகக் கொள்ளுவதனையும், பிறர் ஒன்றாகக் கொள்வதனை இரண்டாகப் பிரித்து அமைப்பதனையும் தெய்வச்சிலையார் உரையில் காணலாம் [7]. மேலும் இவர் தொல்காப்பியர் நூற்பாக்களை ஒழுங்குபடுத்தி அமைத்திருக்கும் முறையும் மிகவும் பாராட்டற் குரியதாகும்.

ஏனைய உரையாசிரியர்கள் வினைமுற்று பற்றிய மூன்று நூற்பாக்களை எச்சவியலில் அமைத்திருக்க, இவர் அவற்றை இடம் பெயர்த்து வினையியலின் இறுதியில் அமைத்துள்ளார் [8]. அவை வினையியலில் அமைக்கப்படுதல் மிகுதியும் பொருந்து வதாக உள்ளது. வேற்றுமை மயங்கியலில் பிற உரையாசிரி யர்கள் 10-ஆம், 13-ஆம் நூற்பாக்களாக அமைந்திருக்கும் ஆறும் வேற்றுமைப் பொருள் மயக்கத்தைக் குறித்து வரும் நூற் பாக்களை ஓரே இடத்தில் சேர்த்துத் தொடர்புபெற வேற்றுமை மயங்கியலில் 15, 16 ஆகிய எண்களிடப்பட்ட நூற்பாக்களாக அமைத்துள்ளார் [9]. மேலும் பிற உரையாசிரியர்கள் எச்சவி யில் இசை நிறை, அசை நிலை பற்றிக் கூறும் நூற்பாக்களைத் தொகுத்து ஒன்றுசேர அமைக்கவில்லை. இவர் அவற்றை இடம் பெயர்த்து எச்சவியலில் 26 முதல் 30 வரையுள்ள நூற்பாக் களாக ஓரே இடத்தில் அமைத்துள்ளார் [10].

பாட வேறுபாடுகள்

தெய்வச்சிலையார் உரையில் பல்வேறு நூற்பாக்கள் பாட வேறுபாட்டுடன் அமைந்துள்ளன. சில இடங்களில் இவ்வேறு பாடுகள் மிகப் பொருத்தமுடையனவாகவும் இலக்கணத் தெளி விற்குப் பயன்படுவனவாகவும் அமைகின்றன. நூலில் காணக் கிடக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் பின் வருமாறு.

நூற்பா எண்	பிறவுரையாசிரியர்கள்	தெய்வச்சிலையார்
24	உருவென	உருபென
70	பழிப்பின்	பழியின்
117	அவைதாம்	அவற்றுள்
148	அளபிறந்தனவே	அளவிறந்தனவே
150	விளியோடுகொளலே	விளிவேற்றுமை கொளலே
170	நீயிர்	நீர்
229	செய்யுமென் கிளவி	செய்யும் கிளவி
268	ஏயும் குரையும்	ஏவும் குரையும்
292	அன்ன பிறவும்	வேறுபிற தோன்றினும்
358	கவர்வு	கவர்பு
361	பேம் / பே	பேஎ
400	மொழிபுணர் இயல்பே	பொருள்புணர் இயல்பே
441	அந்நிலை மரபின்	முன்னிலை மரபின்.

உரை நலன்

பல நூற்பாக்களுக்குப் பிற உரைகளில் காணப்படாத சிறப்பு தெய்வச் சிலையார் உரையில் காணப்படுகின்றது. அவ்வுரைகள் மிகத் தெளிவும் பொருத்தமுற அமைகின்றன. சாலப் பொருந்தும் உரையினையுடை நூற்பாக்கள் அனைத்தையும் அவற்றின் உரை முழுமையும் இவண் தருதல் அரிது [11]. குறிப்பாக ஒரு சிலவற்றை மட்டும் விளக்குதல் சாலும் [12].

எ — டு.

நூற்பா **62** அவை தாம்,
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண் விளி யென்னும் ஈற்ற

உரை : "மேற் சொல்லப்பட்ட வேற்றுமைகள் தாம் பெயர் ஐ, ஒடு, கு இன், அது, கண், விளி யென்று சொல்லப்பட்ட ஈறுகளையுடைய."

இந்நூற்பா வேற்றுமைகளின் பெயரும், முறையும் உணர்த்துகின்றது என்று பிறவுரையாசிரியர்கள் கொள்ள. தெய்வச் சிலையார் வேற்றுமைக்குரிய ஈற்றெழுத்துக்களை நுதலிற்று என்று கொள்ளுவது விளக்க இலக்கண நெறிக்குச் சாலப் பொருந்துவதாக அமைகின்றது.

நூற்பா **67** கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப

உரை : "சொல்லப்பட்ட உருபு முறையானே நின்ற நிலையைத் திரியாது பெயர்க்கு ஈறாகும் இயல்பினையுடைய"

'இவ்வுருபுகள் பெயர்களின் ஈற்றில் வரும்' என்பதை இதனுள் விளக்கி உரை கூறும் பான்மை பாராட்டற்பாலது.

நூற்பா **201** மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப

உரை ; "மார் ஈற்று வினைச்சொல்லும் பல்லோரை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாம். அது பெயரோடு முடிதலேயன்றி, வினையொடும் முடியும் என்று சொல்லுவார்

எ—டு. ஆ கொண்மார் வந்தார். இது வினையொடு முடிந்தது பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே — இது பெயரோடு முடிந்தது.

தெய்வச்சிலையார் இலக்கிய வழக்கிற்குப் பொருந்தும் வகையில், தமது உரையும் எடுத்துக்காட்டுக்களும் ஏற்புற அமைய 'காலக் கிளவியொடும்' என உம்மை சேர்த்துக் கொண்டுள்ள சிறப்பு கண்டு மகிழத்தக்கது.

நூற்பா 440 செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே

உரை : "செய்யாய் என்னும் ஆய் ஈற்று முன்னிலை வினைச்சொல், செய் என்னும் ஏவல் குறித்த வினைச்சொல்லுமாகி வரும்"

இந்த உரையே ஏனையோர் உரையை விட இந்நூற்பாவிற்குச் சிறப்புடையதாய் அமைகின்றது.

சிறந்த விளக்கங்கள்

தெய்வச்சிலையார் பல்வேறு இடங்களில் சிறந்த விளக்கங்களைத் தந்துள்ளமை பாராட்டற்குரித்து. அவைகள் சொற்களின் இலக்கணம் கூறுவனவாகவோ, அன்றேல் விளக்கம் தருவனவாகவோ அமைந்து தொல்காப்பிய இலக்கணத்தில நல்ல தெளிவு ஏற்பட நமக்குப் பயன் படுகின்றன. அவை மிகப் பலவாயினும் எடுத்துக் காட்டாக ஒரு சிலவற்றை இவண் காண்போம்.

1. இசைக்குமன வென்பது செய்ம்மன வென்னும் தொழிற் பெயர். அது செய்யுமனவென விரிந்து நின்றது. அது சொல் லென்னும் பெயர்ப் பயனிலை கொண்டு முடிந்தது. (தொ. சொ. 1)

2. வேற்றுமையியல் : பொருள்களை வேறுபடுத்தினமையாற் பெற்ற பெயர். என்னை வேறுபடுத்தியவாறு எனின், ஒரு பொருளை யொருகால் வினை முதலாக்கியும், ஒரு காற் செயப்படு பொருளாக்கியும், ஒருகாற் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும் ஒருகால் நீங்க நிற்பது ஆக்கியும், ஒருகால் உடையது ஆக்கியும், ஒருகால் இடம் ஆக்கியும் இவ்வாறு வேறு படுத்தது என்க (தொ சொ 61)

3. முன்னிலை வினையென்றது முன்னிலையெனப் பொதுப் பட ஓதினவதனால், அச்சொல் இருவகைப்படும். முன் நின்றான் தொழில் உணர்த்து வனவும், அவனைத்தொழிற்படுத்தற் கு ஏவல் குறித்து வருவனவு மென்க. (தொ சொ. 217)

4. செய்ம்மன என்பது யான் செய்ம்மன. நீ செய்ம்மன. அவன் செய்ம்மன என எல்லாப் பாலோடும் ஒட்டுக. இது இக் காலத்துச் செய்வது, செய்வன, செய்பவை, செய்யுமவை என வழங்கும் போலும் (தொ. சொ. 219)

5. தொகைச் சொல்லாவது: பொருளுணர்த்துஞ் சொல்லாயினும், தொழிலுணர்த்துஞ் சொல்லாயினும் இரண்டு சொல் விட்டிசைத்து நில்லாது ஒட்டி நிற்பது. (தொ. சொ. 407)

முடியுரை

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குத் தெய்வச்சிலையார் உரை தெளிவும் ஆழமும் உடையதாய்; நல்ல பல விளக்கங்களைக் கொண்டதாய் அமைந்து. இலக்கணத்தில் சிறந்த பயிற்சி பெற விழைவார்க்குப் பெரும்பயன் நல்கும் என்பதில் ஐயமில்லை. உரையாசிரியர் இலக்கணத்தை அணுகும் முறை, அவரது உரை, விளக்கங்கள், எடுத்துக்காட்டுக்கள், அவர் கொண்டுள்ள பாட வேறுபாடுகள் ஆகியவை பாராட்டற்குரியனவாயும், படித்துப் பயன் பெறத் தூண்டுவனவாயும் அமைகின்றன என்பதைக் கற்றோர் யாவரும் உணர்வர்.

அடிக்குறிப்புகள்

1 தெய்வச்சிலையார், தொல்காப்பியச் சொல்லதிகார உரை 11
2 ,, , தொல்காப்பியச் சொல்லதிகார உரை 11
3 குறுந்தொகை 23
4 சிறுபாணாற்றுப்படை 20, 21
5 தெய்வச்சிலையார், தொல்காப்பியம் சொல்லதிகார உரை, கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு, 1929, பக். 47
6 ,, பக். 70
7 தெய்வச்சிலையார் உரை, நூற்பா 28, 51, 52, 61, 69, 70, 71, 72, 73 74, 75, 76, 77, 78, 79, 80, 81, 85, 112, 119, 182, 184, 207, 208, 214, 215, 267, 296, 297, 300, 301, 302 303, 310, 311, 319.
8 தெய்வச்சிலையார், சொல்லதிகார உரை 243—245
9 ,, 95, 96
10 ,, 418—422
11 13, 62, 63, 67, 111, 112, 157, 201 203, 243, 287, 440, 441, 445, 446.
12 வேறு பல நூற்பாக்களுக்கும் பிற உரையாசிரியர்களின் உரையினின்று முற்றிலும் வேறுபட்ட உரைகள் உள. 21, 48, 54, 58, 60, 69, 89 94, 99, 100, 103, 125, 190, 191, 234, 236 289, 424, 425, 427, 428 429, 431, 434, 435, 439, 442, 448.

மன்றல் வயது

புலவர் தே. ப. சின்னசாமி,
அரசு உயர்பள்ளி,
சேந்தமங்கலம், சேலம் (மாவட்டம்)

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை வளம் கூறும் தண்டமிழ் இலக்கண, இலக்கியங்கள் மன்றல் வயதாக ஆணிற்குப் பதினாறும், பெண்ணிற்குப் பன்னிரண்டும் கூறுகின்றன. இது சரிதானா? அன்றிச் சரியான வயது எது? என்பதுபற்றி ஆய்வதே இக்கட்டுரை என்க.

ஒப்புமை பத்து: ஒல்காப் பெரும்பொருள் தொல்காப்பியம், மொழிக்கேயன்றி வாழ்க்கை வழிக்கும் இலக்கணம் கூறுவது இது.

"செம்புலப் பெயல் நீர்போல் அன்புடை நெஞ்சந் தாங் கலந்த" தலைவன் தலைவிக்குப் பத்துவகை ஒப்புமை பொருத்தம் கூறுகின்றது.

"பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ
டுருவு நிறத்த காம வாயில் — நிறையே
அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகை."
(தொல் — பொருள் — மெய்ப்பா - 25)

இந்தப் பத்து வகை ஒப்புமையில் யாண்டு என்பதும் ஒன்று. அந்த யாண்டே மன்றல் வயது, திருமண வயது என்று ஈண்டு கொள்ளப்படுகின்றது.

பன்னிரண்டும் பதினாறும் :— வஞ்சிவயவேந்தன் தன் இளவல் செஞ்சொற் புலவன் இயற்றிய நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் ஈராறும், ஈரெட்டும் திருமண வயதாகக் கூறுகின்றது.

"ஈகைவான் கொடியன்னாள் ஈராண்டகவையாள்"
(சில—மங்—24) கண்ணகி என்றும்,

"இருநிதிக் கிழவன் மகன் ஈரெட்டாண்டகவையான்"
(சில—மங்—34) கோவலன் என்றும், வருகின்ற அடிகள் சான்று பகருகின்றன. இதற்கு, "பன்னீராண்டிற்குட்பட்ட பிராயத்தாளாயினாள் என்க," "பதினாறாண்டிற்கு உட்பட்ட பிராயத்தானென்க," "பன்னிரண்டும் பதினாறும் ஆகிய பிராயத்

தின் முதிர்தல் மரபன்மையின் அகவையாள். அகவையானென்றூர்'' என அடியார்க்கு நல்லார் உரை உரைத்தார்

இதே கருத்தை விளக்கியே, திவாகரமும், ''பதினூட்டைக் குமரனும், விதிவழிப் பன்னீராட்டைக் குமரியுமாகி, யொத்த அன்பினும் ஒத்த நலத்தினும் கற்பக நன்மா நற்பயனுதவ ஆகிய செய்தவத்தளவும் அவ்வழிப்போக நுகர்வது போகபூமி'' என்று இயம்புகின்றது-

இக்கருத்துப்படி மன்றல் வயது ஆணிற்குப் பதினூறும். பெண்ணிற்குப் பன்னிரண்டும் என ஆகின்றது.

சரியான வயதா? பதினூறு வயது என்பது ஆணிற்குக் குமரப் பருவமாகும். பன்னிரண்டு வயது என்பது பெண்ணிற்கு மங்கைப் பருவமாகும். குமரப் பருவமும், மங்கைப் பருவமும் திருமணத்திற்குச் சரியான வயதா? இல்லை.

குமரப் பருவம் :— பன்னிரண்டு வயதில் துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்தைத் தாண்டிக் குமரப் பருவத்தில் அடியெடுத்து வைக்கின்றூன், குமரன் பதினூறில் முன் குமரப் பருவத்தைக் கடந்த இவன் இருபதிலேயே குமரப் பருவத்தை முழுதும் அடைகிறூன். எனவே இவனது பதினூறு வயது குமரப் பருவத்தில் உடல் வளர்ச்சி துரிதமாக ஏற்படுகின்றது. பால் (Sex) சுரப்பிகள் முதிர்ச்சி அடைந்து இயக்கம் பெறுகின்றன.

உடல் பருவ மலர்ச்சியும், எழுச்சியும் பெற்றுப் பொலிவோடு வளர்கின்றன. ஆகவே இப்பருவம் ஆண்மையின் வளர்ச்சிப் பருவமே அன்றி முழுமை யடைந்த முதிர்ச்சிப் பருவமன்று. இவ்வயதில் மணம் செய்வது பிஞ்சில் பழுப்பதாகும். எனவே குமரப் பருவமாகிய பதினூறு வயது, திருமண வயது ஆகாது என்க.

மங்கைப் பருவம் :— பூவிற்கு ஏழு பருவங்களுண்டு. பூவோரண்ண பூவையர்க்கும் ஏழு பருவங்களுண்டு. மங்கைப்பருவம் மூன்ருவது பருவம். பதிஞேரு வயதில் பெதும்பைப் பருவத்தைக் கடந்தவள் பன்னிரண்டு வயதில் மங்கைப் பருவத்தின் தலைவாயிலில் நிற்கின்ருள்.

பருவ மலர்ச்சி அடைந்த பன்னிரண்டு வயது பெண்ணின் உடல் பிள்ளைப்பேற்றிற்கும் தகுதிபெற்றதன்று அத்தகுதி இரண்டு அல்லது நான்கியாண்டுக்குப் பின்னர் தான் ஏற்படு

கின்றது என்பது மருத்துவ, உடலியல் நூற்களின் கருத்தென்க. எனவே மங்கைப் பருவமான பன்னிரண்டு வயது பெண்ணிற்குத் திருமண வயது அன்று என்க.

இலக்கியம் தவறு? இலக்கண இலக்கியக் கருத்துப்படி மன்றல் வயது ஆணிற்குப் பதினாறும், பெண்ணிற்குப் பன்னிரண்டும் என்றுகின்றது. உலகியல் கருத்துப்படியும், உடலியல் கருத்துப்படியும் அம்மன்றல் வயது தவறு என்றுகின்றது. அப்படியானல் இலக்கண, இலக்கியங்களின் கூற்று ஐயப்பாடு உடையதா? தவறு?

ஐயமகற்றுகின்றார் இளம்பூரணர்; அவ்வையைப் பாட்டினை இன்றமிழ் உரையார் இளம்பூரணர் தொல்காப்பியம். களவியல் இரண்டாம் நூற்பாவிற்கு உரை எழுதுங்கால் நீக்குகின்றார்.

> "ஆண்டென்பது ஒருவரினொருவர் முதியரன்றி
> ஒத்த பருவத்தராதல், அது குழவிப் பருவங் கழிந்து
> பதினறு பிராயத்தானும், பன்னிரண்டு பிராயத்தாளும்
> ஆதல். குழந்தைப் பருவம் நான்காண்டு என்க."

என்றார்.

எனவே இலக்கிய இலக்கணமும் தவறில்லை. குழந்தைப்பருவம் கழிந்த ஈராண்டும், ஈரெட்டாண்டும் மன்றல் வயது என்றே கொள்ளவேண்டும்.

ஆகவே இன்றமிழாசான் இளங்கோவடிகளின் கண்ணகிக்கு, "ஈராண்டகவையாள்" கோவலனுக்கு, "ஈரெட்டாண்டகவையான்" என்ற இலக்கியம் தவறில்லை என்பதைத் தெளியலாம்.

இன்றைய மன்றல் வயது:— பண்டைக் காலத்தில் திருமண வயது ஆணிற்குப் பதினறு அன்று இருபது என்பதும், பெண்ணிற்குப் பன்னிரண்டு அன்று பதினறு என்பதும் முடிவு.

ஆனல் இன்று இவ்வயதெல்லை நீண்டுள்ளது. பெண்ணிற்கு இருபதும், ஆணிற்கு இருபத்தைந்தும் திருமண வயதாக மறைமலை அடிகளார் திரு. வி. க. போன்றோர் கூறியுள்ளனர் இன்று இதுவே சரியான வயது என்கின்றனர் பலரும்.

இன்றையச் சூழ்நிலையில் பெண்ணிற்கு இருபத்தைந்தும், ஆணிற்கு முப்பதும் ஆகஉயர்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு கூறு.

9

தமிழ் மொழி அஃதன் உயரிய பண்புகளுடன் வளர இன்றியமையாத பல முயற்சிகளில் ஒன்று தமிழ் மக்கள் அன்றாட வாழ்க்கையில் கனியிருப்பக் காய்கவராது பிறமொழிச் சொற்களில்லாமல் இனிய தமிழ்ச் சொற்களைப் பேசியும் எழுதியும் வருதல் வேண்டும். அவ் வழியில் சென்ற இதழ்களின் தொடர்ச்சியாக வழக்காற்றில் உள்ள சில சொற்களுக்குத் தூய தமிழ்ச் சொற்கள் இவ்விதழில் வெளியிடப் பெறுகின்றன. இவற்றைப் பயில்வார் பயன்படுத்து வாராக.

எவையேனும் சில சொற்களுக்குத் திருத்தங்கள் ஏற்றதெனக் கருதினுல் வழக்கம்போல் அன்பர்கள் அவைகளை எழுதியனுப்ப வேண்டுகிறேம்.

மனச்சாட்சி	—	மனச்சான்று, உளச்சான்று,
சம்பந்தப்பட்ட	—	தொடர்புடைய.
சமீபம்	—	அண்மை, அருகு
தயார்	—	அணுக்கம், அணியம், செவ்வி,
சந்தர்ப்பம்	—	நேர்ச்சி.
பிரமாதம்	—	மேலானது, மேன்மை, உயர்வு.
பிரபலம்	—	புகழ்
சகோதரர்	—	உடன் பிறந்தார்.
சகோதரி	—	உடன் பிறந்தாள்
லக்ஷியம்	—	குறிக்கோள், நோக்கம்.
தியானம்	—	வழிபாடு, இறை நினைவு.
சர்க்கார்	—	அரசு.
ராணுவம்	—	படை.
விஷயங்கள்	—	பொருள்.
விசேஷம்	—	சிறப்பு.
பூஜை	—	பூசனை.

அம்சம்	—	பங்கு, பாங்கு, கூறு.
சம்பாதி	—	ஈட்டு.
சம்பாத்யம்	—	ஈட்டம்.
தைரியம்	—	தறுகண், அஞ்சாமை
அதைரியம்	—	துணிவின்மை.
பிரக்ஞை	—	உணர்வு
நிச்சயம்	—	உறுதி.
உற்சாகம்	—	கிளர்ச்சி,
சிலாக்கியம்	—	உயர்வு.
சிலாகித்து	—	பாராட்டி.
சாமர்த்தியம்	—	திறப்பாடு, திறமை
கைங்கர்யம்	—	கொடை.
முக்கியம்	—	இன்றியமையாமை
உபதேசம்	—	செவியறிவுறூ
உத்தேசம்	—	கருது பொருள், எண்ணம்.
தோஷம்	—	குற்றம்.
ஸ்நானம்	—	நீராடல், குளித்தல்.
கம்பீரம்	—	செம்மாப்பு.
போஷணை	—	பேணல், புரத்தல்
போஷிப்பது	—	புறந்தருதல்.
சாதனம்	—	துணைக்கருவி.
தர்மம்	—	அறம், ஒழுக்கம்.
கொடை	—	ஈகை.
அற்புதம்	—	வியப்பு.
பிரார்த்தனை	—	வேண்டுகோள்
இஷ்டம்	—	விருப்பம்.
தரிசனம்	—	காட்சி.
பிரயோசனம்	—	பயன்.
சந்தோஷம்	—	மகிழ்ச்சி, உவப்பு.
புஷ்பம்	—	மலர்.
சகவாசம்	—	இனச் சார்பு
சகவாச தோஷம்	—	உடனுறை குற்றம்.
பண்டிகை	—	விழா.
ஆனந்தம்	—	பேரின்பம்.